# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE,CHEYYAR

CASE NO. SC. No. 203/2019

Prosecution witness PW - 3

Name .... கதிர்வேல்

Father's Name ....

Village ....

Taluk ....

Caste ....

Calling ....

Religion ....

Age ....

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of 02nd day of September 2024.

( எதிரிகள் ஆஜர் வழக்கறிஞர் ஆஜரில்லை)

முதல் விசாரணை

நான் மேல்நகரம்பேடு கிராமத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எதிரிகள் தேத்துறை கிராமத்தை சேர்ந்தவர்கள். 13.06.2018 ஆம் தேதி எனது மாமனார், மாமியாருக்கு திருமண நாள். தேத்துறை கிராமத்தை சேர்ந்த ராஜா, சோனியா இரண்டு மாதத்திற்கு முன்பு காதல் திருமணம் செய்துகொண்டார்கள். சோனியா பெற்றோர்கள் என் மாமனார், மாமியார் மற்றும் என் மச்சானை தேவையில்லாத வார்த்தையால் பேசியுள்ளார்கள்.

அவர்கள் திட்டியதை என் மச்சான் ஏற்கனவே போன் செய்து எனக்கு சொன்னார். என் மாமனார் மாமியாருக்கு திருமண நாள் என்பதால் அதை கொண்டாடுவோம் என்று எங்களை போன் செய்து என் மச்சான் அழைத்தார். நான், என் மனைவி, மகள்

சென்றோம். அங்கு சென்றபோது மாலை 6.30 மணி இருக்கும். விழாவை கொண்டாடுவதற்கு ஏற்பாடு செய்துவைத்திருந்தோம். 8.45 மணியளவில் பாஸ்கரன், தயாளன், மகேஷ், ராஜேஷ், மணி, தேவி ஆகியோர்கள் வீட்டிற்கு உள்ளே புகுந்து எங்கள் குடும்பத்தை அசிங்கபடுத்திவிட்டீர்கள் உங்களுக்கு என்ன கல்யாண நாள் வாழுது தேவிடியா பசங்களா என்று சொல்லி பேசினார்கள். தயாளன் என்பவர் என் மாமனார் முடியை பிடித்து இழுத்துசென்று அடித்தார். என் மாமனார் வலது காலில் ராடு பொறுத்தப்பட்டிருந்தது. அந்த கால்மீது எட்டி உதைத்துவிட்டார். என் மச்சான் சிகாமணி சண்டையை மடக்குவதற்காக சென்றார். மகேஷ் என்பவர் தடியை எடுத்துச்சென்று முதுகிலும், தலையிலும் சிகாமணியை அடித்துவிட்டார். அவர்களை அடித்துவிட்டார் என்று நான் மடக்குவதற்காக சென்றேன். பாஸ்கரனும், தயாளனும் என்னை வலது பக்க தோல்பட்டையில் அடித்துவிட்டார்கள்.

என்னால் கையை தூக்க முடிவதில்லை. வீட்டில் இருந்த எனது மனைவியை முடியை பிடித்து மகேஷ், ராஜேஷ் இழுத்துவந்தார்கள். என் மனைவி 5 மாதம் கர்ப்பினியாக இருந்தார். அதை பார்க்காமலும் முதுகு மீதும், வயிற்றின் மீதும், நெஞ்சின் மீதும் எட்டி எட்டி உதைத்தார்கள். என் மனைவி மயக்கமாகி கீழே விழுந்துவிட்டார். தேவி என்பவர் என் மனைவியின் கை கால்களை பிடித்துக்கொண்டார். மகேஷ், ராஜேஷ் இருவரும் என் மனைவியின் ஜாக்கெட், பாவாடையை கிழித்து விட்டார்கள். என் மாமியார் காந்தா வந்தார். அவரை தயாளன் என்பவர் அடித்துவிட்டார். இ.பி.யில் ஆன் ஆப் செய்யும் ராடால் வலது காலின் மீது அடித்தார். அவர் கீழே விழுந்துவிட்டார். தேவிடியா முண்டை நீ சாவுடி சாவுடி என்று சொல்லி இரும்பு ராடை ஓங்கி வலது கை பக்கம் காது ஓரம் தலையில் அடித்தார். என் மாமியார் சுயநினைவு இல்லாமல் விழுந்துவிட்டார். மணி என்பவர் என் மாமியார் கழுத்தின்மீது காலை வைத்து தேவிடியா நீ உயிருடன் இருக்ககூடாது என சொன்னார். அதன்பிறகு எங்களுடன் மோதினால்

உருட்டுகட்டையால் வைத்து மிரட்டினார். தயாளன் இ.பி. ஆன் ஆப் ராடாலும், ராஜேஷ் கத்தியாலும் மிரட்டினார். இதன்பிறகு மோதினால் வெட்டி பெட்ரோல் ஊற்றி கொளுத்திவிடுவதாக சொன்னார்கள். என் மாமியாரை வந்தவாசி அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். அங்கு முடியாது என்றும், செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு செல்லுமாறு சொன்னார்கள். 108 ஆம்புலன்ஸ் மூலம் செங்கல்பட்டு சென்றோம். அங்கு ஸ்கேன் எடுத்து பார்த்ததில் மண்டைஓடு உடைந்து இரத்தகசிவு அதிகமாக உள்ளது என்றும், இங்கு இருக்கவேண்டாம் என்று சொன்னார்கள். 108 ஆம்புலன்ஸ் மூலம் சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். அங்கு என் மாமியாருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. காவல்துறையினர் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பில்வழக்கறிஞர் ஆஜரில்லை. குறுக்கு விசாரணை இல்லை.

<u>DEPOSITION OF WITNESS</u>

<u>(Chapter XXIII Code of Criminal Procedure)</u>

<u>IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE,CHEYYAR</u>

CASE NO. SC. No. 203/2019

Prosecution witness PW - 2

Name .... வசந்தாமணி

Father's Name ....

Village ....

Taluk ....

Caste ....

Calling ....

Religion ....

Age ....

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of 02nd day of September 2024.

( எதிரிகள் ஆஜர் வழக்கறிஞர் ஆஜரில்லை)

முதல் விசாரணை

நான் மேல்நகரம்பேடு கிராமத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். தேத்துறை என் தாயார் வீடு. நானும் என் கணவர் கதிர்வேலும் மாங்கால் கூட்ரோட்டில் வேலை செய்துவந்தோம்.

என் அம்மாவிற்கு திருமண நாள் வந்தது. 13.06.2018 ஆம் தேதி திருமணநாள். தேத்துறை கிராமத்தில் ராஜா என்பவர் சோனியா என்பவரை திருமணம் செய்துகொண்டார். என் தம்பி சிகாமணி சென்னையில் படித்து வந்தார். ராஜா, சோனியா திருமணம் செய்துகொண்டதற்கு என் பெற்றோர்களும், என் தம்பியும் தான் என்று சோனியாவின் பெற்றோர்கள் அசிங்க அசிங்கமாக பேசினார்கள். என் தம்பி என்னிடம் போன் செய்து சொன்னார். என் தம்பி ராஜா, சோனியாவிற்கு திருமணம்

செய்துவைக்கவில்லை என்றும், சோனியா பெற்றோர்கள் தினமும் வந்து அசிங்க அசிங்கமாக பேசுவதாக சொன்னார். என் பெற்றோர்களுக்கு திருமண நாள் வந்தது. என் கணவரை அழைத்து வருமாறு சொன்னார். நான், என் கணவர், குழந்தை எல்லோரும் என் அம்மாவீட்டிற்கு இரவு 8.45 மணிக்கு சென்றோம். அங்கு ஏற்பாடு செய்துகொண்டிருந்தார்கள். பாஸ்கரன் உறவினர்கள் மகேஷ், ராஜேஷ், தயாளன், தேவி, மணி எல்லோரும் வீட்டிற்கு வந்து எங்கள் குடும்பத்தை அசிங்கப்படுத்திவிட்டீர்கள், நீங்கள் மட்டும் சந்தோஷமாக கல்யாணநாள் கொண்டாடுகிறீர்கள் தேவிடியா பசங்காள வெளியவாங்கடா என்று சொல்லி திட்டினார்கள். எதற்கு அசிங்கமாக பேசுகிறீர்கள் என்று கேட்ட எல்லோரையும் வீட்டிற்கு உள்ளே வந்து என்னை, என் பெற்றோர்களை, என் தம்பி, என் கணவர் ஆகியோர்களை ரோட்டில் இழுத்து போட்டு அடித்தார்கள். என் அப்பாவிற்கு வலதுபுற காலில் ராடு வைத்திருந்தது.

தயாளன் கால்மீது எட்டிஉதைத்து சாவுடா என்று சொன்னார். என் அப்பா கீழே விழுந்துவிட்டார். மகேஷ் கட்டையால் என் தம்பியின் தலை, முதுகில் அடித்தார். மகேஷ், பாஸ்கர் என் கணவர் கதிர்வேலை அடித்தார்கள் என் கணவரால் கையை தூக்கமுடிவதில்லை. மகேஷ், ராஜேஷ் என் வயிற்றின்மீது எட்டி எட்டி உதைத்தார்கள். நான் 5 மாதம் கர்ப்பமாக இருந்தேன். அவர்களுடைய அக்கா என் கையை பிடித்துக்கொண்டார். அடித்து தரதரவென்று இழுத்துசென்றார்கள். தயாளன் இ.பி.யில் பணிபுரிகிறார். அவர் ஆன் ஆப் ராடைவைத்து என் அம்மாவின் காலில் அடித்தார். அவர் கீழே விழுந்தவுடன் தலையில் ஓங்கிஅடித்தார். சாவுடி தேவிடியா என்று சொன்னார். என் தாயார் மயங்கி கீழே விழுந்துவிட்டார். என் தாயாருக்கு பேச்சுமூச்சு இல்லை. கத்தி, ராடு, கட்டை வைத்து எங்கள் பிரச்சனைக்கு வந்தால் வீட்டோடு வைத்து கொளுத்திவிடுவோம் என்று சொன்னார்கள். என் தாயாரை வந்தவாசி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். அங்கு முடியாது என்று சொன்னதால் செங்கல்பட்டு அரசு

மருத்துவமனையில் சேர்த்தோம். அங்கு ஸ்கேன் எடுத்து பார்த்தார்கள். மண்டை உடைந்து மூளையில் இரத்த கசிவு ஏற்பட்டதாக சொன்னார்கள். அங்கும் முடியாது என்று சொல்லிவிட்டார்கள். அதன்பிறகு சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். என் தம்பி காவல்நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார். காவல்துறையினர் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பில்வழக்கறிஞர் ஆஜரில்லை. குறுக்கு விசாரணை இல்லை.

<u>DEPOSITION OF WITNESS</u>

<u>(Chapter XXIII Code of Criminal Procedure)</u>

<u>IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE,CHEYYAR</u>

CASE NO. SC. No. 203/2019

Prosecution witness PW - 1

Name .... சிகாமணி

Father's Name ....

Village ....

Taluk ....

Caste ....

Calling ....

Religion ....

Age ....

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of 02nd day of September 2024.

( எதிரிகள் ஆஜர் வழக்கறிஞர் ஆஜரில்லை)

முதல் விசாரணை

நான் தேத்துறை கிராமத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும், அவர்களும் தேத்துறை கிராமத்தில் தான் வசித்து வருகிறார்கள். ராஜா, சோனியா என்பவர்கள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள், அவர்கள் இருவரும் காதல் திருமணம் செய்துகொண்டார்கள். நானும் என் பெற்றோர்களும் தான் ராஜா, சோனியாவிற்கு திருமணம் செய்துவைத்தோம் என்று சோனியாவின் பெற்றோர்கள் பாஸ்கரன் மற்றும் வகிதா இருவரும் எங்களை கெட்டகெட்ட வார்த்தையால் திட்டிக்கொண்டு இருந்தார்கள்.

13.06.2018 ஆம் தேதி இரவு 8.45 மணிக்கு என் வீட்டில் என் பெற்றோர்களின் திருமணநாளை கொண்டாடுவதற்காக என்னுடைய உறவினர்கள், நண்பர்கள், அக்கா, மாமா எல்லோரையும் வரவழைத்திருந்தோம். அப்போது பாஸ்கரன், தயாளன், ராஜேஷ்,

மகேஷ், மணி, தேவி ஆகியோர்கள் எங்கள் வீடு நுழைந்து எங்களை அசிங்கப்படுத்திவிட்டு தேவிடியா பசங்காள நீங்கள் திருமண நாள் கொண்டாடுகிறீர்களா என்று சொல்லி அடித்து ரோட்டிற்கு இழுத்து சென்றுவிட்டார்கள். என் அப்பாவிற்கு ஏற்கனவே கால் உடைந்து ஸ்டீல் ராடு பொறுத்தப்பட்டிருந்தது.

தயாளன் தேவிடியா பையா என்று சொல்லி கால்மீது எட்டிஉதைத்ததில் என் அப்பா கீழே விழுந்துவிட்டார்.மகேஷ் என்பவர் என் தலையிலும், முதுகிலும் உருட்டுக்கட்டையால் அடித்தார். தயாளன் மற்றும் பாஸ்கரன் என் மாமா கதிர்வேலை வலது தோல்பட்டையில் தாக்கினார்கள். ராஜேஷ் மற்றும் மகேஷ் கர்ப்பமாக இருந்த என் அக்கா வசந்தாமணியை வயிற்றின் மீது எட்டி உதைத்துவிட்டார்கள். தேவி என் அக்காவின் கையை பிடித்துக்கொண்டார், ராஜேஷ் மற்றும் மகேஷ் என் அக்காவின் ஜாக்கெட் மற்றும் பாவாடையை கிழித்து தரதரவென்று இழுத்து சென்றுவிட்டார்கள்.

தயாளன் ஈ.பி.யில் வேலை செய்கிறார். அவர் உபயோகப்படுத்தும் ஆன் ஆப் ஹேண்டில் ராடு எடுத்து என் அம்மாவின் காலில் அடித்துவிட்டார். பிறகு இத்தோடு செத்துப்போ தேவிடியா என்று சொல்லி தலையில் ஓங்கி அடித்துவிட்டார். என் தாயார் மயங்கி விழுந்துவிட்டார். அப்போது மணி என்பவர் என் அம்மாவின் கழுத்தின்மேல் கால்வைத்து சாவுடி சாவுடி என்று சொல்லி மிதித்தார். பிறகு அவர்கள் அனைவரும் கத்தி, இரும்பு ராடு ஆயுதங்களை காட்டி எங்களோடு இதன்பிறகு மோதினால் வீட்டோடு வெட்டி கொலைசெய்து கொளுத்திவிடுவோம் என்று சொல்லி மிரட்டி விட்டு சென்றார்கள். அதன்பிறகு என் தாயாரை வந்தவாசி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். அங்கு முடியாது என்று சொன்னதால் செங்கல்பட்டு அரசுமருத்துவனையில் சேர்த்தோம். அங்கு சி.டி.ஸ்கேன் எடுத்து பார்த்ததில் மண்டைஓடு உடைந்திருந்ததாகவும், மூளையில் ரத்தக்கசிவு இருந்ததாகவும் சொன்னார்கள். பிறகு மேல்சிகிச்சைக்காக சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பினார்கள். அங்கு

சேர்த்து சிகிச்சை அளிக்கப்பட்டது. அதன்பிறகு அடுத்தநாள் நான் அனக்காவூர் காவல்நிலையம் வந்து புகார் கொடுத்தேன். நான் கொடுத்த **புகார் அ.சா.ஆ.1.** என்னிடம் காண்பிக்கப்படும் ராடால் தான் அடித்தார்கள். அந்த ராடு சா.பொ.1. வழக்கு சம்மந்தமாக காவல்துறையினர் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பில்வழக்கறிஞர் ஆஜரில்லை. குறுக்கு விசாரணை இல்லை.